# Creativity in Television Production

07.08.2022 அன்று பாடலாசிரியர் திரு ஆ.பா. ராஜாவை சிறப்பு விருந்தினராகக் கொண்ட அமர்வு, இலயோலா கல்லூரியில் நடைபெற்றது. அதில் ஊடகவியல்துறை மாணவர்கள் அணைவரும் பங்குபெற்றனர். காலை 9 மணியளவில் துவங்கிய இந்த அமர்வு, 11:30 வரை ஆர்வத்துடன் நடைபெற்றது. நிகழ்வில் பங்கேற்று சிறப்பு செய்த ஆ.பா.ராஜாவிற்கு ஆசிரியர் திரு. நரசிம்மன் அவர்கள் பொன்னாடை அணிவித்தும் ஆசிரியை திருமதி. கீர்த்தி அவர்கள் பரிசு வழங்கியும் கவுரவித்தனர்.

அமர்வின் துவக்கத்திலேயே "Guest Lecturer ஆக வந்திருந்தாலும் நான் Guest மட்டுமே Lecture எடுக்க வரவில்லை" என அணைவரின் கவனத்தையும் ஈர்த்தார் ஆ.பா. ராஜா. இந்த நிகழ்வை ஒரு கலந்துரையாடல் அமர்வாக மாற்றிய ஆ.பா.ராஜா மாணவர்களின் கேள்விகளுக்கு சிறப்பான முறையில் பதிலளித்தார். மக்கள் தொலைக்காட்சி மற்றும் கலைஞர் தொலைக்காட்சியில் Program Directorஆக பணியாற்றியுள்ள இவர் தன் அனுபவங்கள் ஊடாக மாணவர்களின் கேள்விகளுக்கு எளிய முறையில் விளக்கமளித்தார். மேலும் தொலைக்காட்சிகள் மக்களிடத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களை விவரித்தார். 2010களில் எப்படி அதிகமான பக்தி நிகழ்ச்சிகள் மூலம், மக்களிடையே கடவுள் நம்பிக்கை பரப்பப்பட்டது என்பதை விளக்கினார். தற்போதைய நிலையில் எந்த மாதிரியான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வரவேற்பைப் பெறும் என்ற கலந்துரையாடலில் சமையல், கட்டுக்கதைகள், பிரபலங்கள் பற்றிய நிகழ்ச்சிகள் போன்றவற்றையே கூறினார்.

முந்தைய காலத்தில் இருந்த, கேட்பவர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் பாடல் வரிகள் இப்போது எந்த பாடல்களிலும் கிடைப்பதில்லையே என ஒரு மாணவர் கேட்ட கேள்விக்கு காலத்திற்கேற்ப மாறவேண்டிய கட்டாயம் இருப்பதை விளக்கினார். மக்களின் விருப்பத்திற்கேற்ப படைப்புகள் அமைய வேண்டிய கட்டாயத்தினை விவரித்தார். ஒரு படைப்பாளியின் எல்லா படைப்புகளிலும் சமூக அக்கறை வெளிப்பட வேண்டும் என மாணவர்களிடத்தில் தெரிவித்தார். தனக்கு சமுதாய அக்கரை உள்ள பாடல்கள் எழுதவே ஆசை எனவும் கூறினார். தான் ஒரு பாடல் எழுத எடுத்துக்கொள்ளும் நேரத்தைப் பற்றியும் மாணவர்களிடத்தில் பகிர்ந்துகொண்டார். குட்டிப்பட்டாசு பாடலுக்கு வெறும் 2 நாட்களும், பற்றவைத்த நெருப்பு பாடலுக்கு 1 மாதமும் எடுத்துக்கொண்டதன் இயல்பை விவரித்தார். மேலும் மாணவர்கள் மற்ற கேள்விகள் அணைத்திற்கும் பதிலளித்தார். வரிகளுக்கு ராகம் போட்டது போக ராகத்திற்கு வரிகள் தேடும் தற்போதைய நிலையை எடுத்துரைத்தார். தான்

 

எழுதும் அணைத்து பாடல்களிலும் சமூக அக்கரையின் துனுக்கு இருக்க வேண்டும் என அவர் விரும்புவதைக் கூறினார். எப்போதும் பிறரை காயப்படுத்தும் வரிகள் அறியாமலும் எழுதிடக்கூடாது என்பதில் தெளிவாக உள்ளார். ஏனெனில் பாடல்களுக்கு மட்டுமே உயிரைனைத் தொடும் தன்மை உள்ளது எனக் கூறி அணைவரையும் அவரை ரசிக்க வைத்தார்.

மற்றொரு மாணவர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும்போது நடுநிலை என ஒன்று இல்லை எனப் பேசிய அவரது பேச்சுகள் அவரை மேலும் ரசிக்க வைத்தது. ஒரு தொலைக்காட்சியில் வேலை செய்யும் போது ஏற்படும் சித்தாந்த முரண்களை எப்படி கையாள்வது என்பதையும் விளக்கினார். ஒரு தொலைக்காட்சியின் நிலைப்பாடும் அதில் வேலை செய்பவரின் நிலைப்பாடும் வேறாக இருக்கும்போது அதனை எப்படிக் கையாள்வது என்பதை விவரித்தார். நிகழ்வை முடிக்கும்போது "Okay நண்பர்களே" என முடித்தது அவரது இயல்பான போக்கை வெளிப்படுத்தியது.

அவர் உரையைத் தொடர்ந்து நன்றியுரை வழங்கிய ஆசிரியர் திரு.ஆரோக்கியராஜ் அவர்கள் தன் நண்பரின் உரையைப் பற்றி பேசிவிட்டு மாணவர்களுக்கு பயன் தருமாறு அமைந்த இந்த அமர்வுக்கு காரணமாக இருந்த அணைவருக்கும் நன்றியினைத் தெரிவித்தார். இந்த நிகழ்வை 21PDJ மாணவர்களை எடுத்து நடத்த வைத்த அவர், மாணவர்களுக்கு தன் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.